ட்ரான்ஸ்ஃபார்ம்TO:
நிகர பூஜ்யத்தை எட்டுதல்

# சமூகக் கலந்துரையாடல் வழிகாட்டி

ஜூன்/ஜூலை 2021



# பொருளடக்க அட்டவணை


**கலந்துரையாடல் வழிகாட்டி பற்றி ____ 4**

**உங்கள் சொந்தக் கலந்துரையாடலுக்கு அல்லது சந்திப்புக்கு இடச்சேவை அளிப்பதற்கான கருவிகளும் வளங்களும் ____ 6**

ஒரு இணையவழி உரையாடலுக்கு இடச்சேவை அளிப்பதற்கான உதவிக்குறிப்புகள்.... 6
தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பயிலுங்கள் .... 7
இடச்சேவை.... 8
வழிவகுத்தல் உதவிக்குறிப்புகள்.... 8
பிற பொறுப்புகளைத் தேர்வு செய்யுங்கள்.... 10
கலந்துரையாடலை எப்படி ஒழுங்குசெய்வீர்கள் என முடிவு செய்யுங்கள்.... 10
பின்னணிப் பொருட்களை வழங்குங்கள்.... 11
உங்கள் உரையாடலுக்கு இடச்சேவை அளியுங்கள் .... 11
உங்கள் குழுவின் மெய்நிகர் நிழற்படம் (திரைப்படிமம்) ஒன்று எடுங்கள். .... 11
பங்கேற்பாளர்களை ஒரு தகவல் படிவத்தை நிரப்பச் செய்யுங்கள். .... 11
கருத்துப்பதிவைப் பகிர்தல்.... 11
மாதிரி நிகழ்ச்சி நிரல்.... 12
மாதிரி விரிவான நிகழ்ச்சி நிரல் .... 13

**ட்ரான்ஸ்ஃபார்ம்TO நிகர பூஜ்ய வியூகம் மற்றும் காலநிலை நடவடிக்கைகள் குறித்த பின்னணித் தகவல்கள் ____ 18**

ட்ரான்ஸ்ஃபார்ம்TO நிகர பூஜ்ய வியூகம் என்பது என்ன? .... 18
நிகர பூஜ்யத்தை எட்டுதல், யாரையும் விலக்காமல் .... 19
எவ்வளவு விரைவோ அவ்வளவு நல்லது. .... 19
துணிச்சலான நகர்வுகளால் இயங்கும் நிகர பூஜ்யம் .... 20
நாம் நிகர பூஜ்யத்தை எட்டுவது எப்படி?.... 20
நிகர பூஜ்யத்தை எட்டுவதில் உள்ள பலன்கள் யாவை? .... 23
நிகர பூஜ்யக் காலநிலை நடவடிக்கைகள் .... 24
கட்டிடங்கள் .... 24
ஆற்றல்.... 26




போக்குவரத்து ........ 27
நிலைபெறு நுகர்வும் கழிவும் ........ 28
பசுமைவெளி ........ 28
முடிவெடுத்தல் மற்றும் நியாயமான ஈடுபாடு ........ 29
**நாம் நிகர பூஜ்யத்தை எட்ட உதவுங்கள்! ........ 30**
**முன்மொழியப்படும் ட்ரான்ஸ்ஃபார்ம்TO நிகர பூஜ்ய வியூக நடவடிக்கைகள் - விவரச்சுருக்கம் ........ 31**
**கலைச்சொற்கள் மற்றும் வரையறைகள் ........ 33**
**கலந்துரையாடல் வழிகாட்டி ________ 36**



# கலந்துரையாடல் வழிகாட்டி பற்றி

வரும் இலையுதிர்காலத்தில் டொரன்டோ நகர சபையிடம் வழங்கப்படவிருக்கும் ட்ரான்ஸ்ஃபார்ம்TO நிகர பூஜ்ய வியூகம் பற்றிச் சமூக உறுப்பினர்கள் தங்கள் சொந்த உரையாடல்களுக்கு இடச்சேவை அளிக்க உதவுவதற்காக இந்த வழிகாட்டி உருவாக்கப்பட்டது.

பசுமை இல்ல வாயு உமிழ்வுகளை நிகர பூஜ்யத்திற்குக் குறைக்கத் தற்போது பரிசீலனையில் உள்ள காலநிலை நடவடிக்கைகள் குறித்து டொரன்டோ வாசிகளின் கருத்துக்களை நாங்கள் நாடுகிறோம். மக்கள் இதில் ஈடுபட இன்னொரு வழியை இந்த வழிகாட்டி அளிக்கிறது. காலநிலை மாற்றத்தைப் பற்றி ஓர் உரையாடலைத் தொடங்கவும் தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளவும் விரும்பும் சமூகக் குழுக்கள், அமைப்புகள், நட்பு மற்றும் குடும்பக் குழுக்கள், தனிநபர்கள் ஆகியோரால் பயன்படுத்தப்படுவதற்கு இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது எந்த அளவிலான குழுவுக்கும் அல்லது நேர வரம்புக்கும் ஏற்கப்படலாம். நீங்கள் எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளிக்கவோ ஒவ்வொரு தலைப்பைப் பற்றியும் பேசவோ தேவையில்லை. இது கோவிட்-19 கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடல்களில் பெரும்பாலானவை (அனைத்தும் அல்ல என்றாலும்) மெய்நிகர் முறையில் நிகழும் எனக் கருதிக்கொள்ளப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடல் வழிகாட்டியில் மூன்று பிரிவுகள் அடங்கும்:

1. உங்கள் சொந்தக் கலந்துரையாடலுக்கு அல்லது சந்திப்புக்கு இடச்சேவை அளிப்பதற்கான கருவிகளும் வளங்களும்;
2. ட்ரான்ஸ்ஃபார்ம்TO நிகர பூஜ்ய வியூகம் மற்றும் காலநிலை நடவடிக்கைகளின் உருவாக்கம் குறித்த பின்னணித் தகவல்கள்;
3. கலந்துரையாடல் கேள்விகள்.



நீங்கள் இந்த வழிகாட்டியைப் பயன்படுத்தி ஒரு நிகழ்வுக்கு இடச்சேவை அளிக்கிறீர்கள் என்றால், டொரன்டோ நகரம் சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர ஆதரவு, இருப்பியக்க ஆதரவு, மெய்நிகர் நிகழ்வுப் பங்கேற்பு, உள்ளூர் காலநிலை நடவடிக்கையில் செயலூக்கமாக உள்ள குழுக்களுடன் தொடர்புகள், தொடர்பான பின்னணிப் பொருட்கள் மற்றும் தகவல்கள் போன்றவற்றில் ஆதரவு வழங்க இயலக்கூடும். நீங்கள் உங்கள் நிகழ்வுக்கு ஆதரவு பெற விரும்பினால் தயவுசெய்து transform@toronto.ca என்ற மின்னஞ்சலைத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் வலைப்பின்னலுக்குள் உரையாடல்கள் நடத்த தயவுசெய்து இந்தக் கலந்துரையாடல் வழிகாட்டியைப் பயன்படுத்துங்கள், உங்கள் பதில்களை **ஜூலை 26, 2021**-க்குள் இணையவழிப் படிவத்தின் மூலமாக வழங்குங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமாக transform@toronto.ca-க்கு அனுப்புங்கள்.

சேகரிக்கப்படும் எல்லா கருத்துப்பதிவுகளும் ட்ரான்ஸ்ஃபார்ம்TO நிகர பூஜ்ய வியூகத்திற்குத் தகவல் அளிக்க உதவும். இவற்றை 2021 இலையுதிர்காலத்தில் நகர ஊழியர்கள் டொரன்டோ நகர சபையிடம் வழங்குவார்கள்.



# உங்கள் சொந்தக் கலந்துரையாடலுக்கு அல்லது சந்திப்புக்கு இடச்சேவை அளிப்பதற்கான கருவிகளும் வளங்களும்

உங்கள் சமூகத்தில் மெய்நிகர் சந்திப்புகளுக்கு இடச்சேவை அளிக்க உதவ இந்த உதவிக்குறிப்புகளையும் எடுத்துக்காட்டு நிகழ்ச்சி நிரல்களையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் கருத்துப்பதிவை இணையவழி சமர்ப்பிக்க மறந்துவிடாதீர்கள்.

## ஒரு இணையவழி உரையாடலுக்கு இடச்சேவை அளிப்பதற்கான உதவிக்குறிப்புகள்

- ஒரு நேரம், இடம், குறிக்கோள் ஆகியவற்றை முடிவு செய்யுங்கள்.
- சந்திப்பில் யாரெல்லாம் பங்கேற்க வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதையும் எதைப் பற்றிப் பேச விரும்புகிறீர்கள் என்பதையும் தீர்மானியுங்கள்.
- பின்னணித் தகவல்கள் மற்றும் கேள்விகள் உட்பட இந்தக் கலந்துரையாடல் வழிகாட்டியை மீள்பார்வையிடுங்கள். நீங்கள் எல்லாக் கேள்விகளைப் பற்றியும் பேசலாம், உங்களுக்கு ஆர்வம் இருக்கும் கேள்விகளைப் பற்றி மட்டும் பேசலாம், அல்லது உங்கள் குழுவைச் சிறு குழுக்களாகப் பிரித்து, அவற்றுகிடையே பிரிவுகளை உருவாக்கலாம்.
- நீங்கள் என்ன மேடையைப் பயன்படுத்துவீர்கள் என்பதைத் தீர்மானியுங்கள். இணையவழி தொடர்புறுத்திக் கூட்டாகச் செயல்படப் பல வழிகள் உள்ளன. சில எடுத்துக்காட்டுகளில் பின்வருவனவும் அடங்கும்: WebEx, Skype, Google Hangouts. தயவுசெய்து



கருத்தில் கொள்க: இந்த விருப்பத் தேர்வுப் பட்டியல், நகரத்தின் அங்கீகாரத்தைப் பெற்றதல்ல.

- பங்கேற்பாளர்கள், உங்கள் அமைப்பின் அல்லது சமூகத்தின் உறுப்பினர்கள் ஆகியோரைத் தொடர்பு கொண்டு அவர்களுக்கு எந்த நேரமும் சந்திப்பு வடிவமும் சிறந்ததாக இருக்கும் என்று பாருங்கள்.
- பணிச் சுழற்சிமுறைகள், குழந்தைப் பேணல், அல்லது பிற பொறுப்புகளை உள்ளடக்க ஒன்றுக்கு மேற்பட்ட அமர்வுக்கு இடச்சேவை அளிப்பது பற்றிப் பரிசீலியுங்கள்.
- அழைக்கப்படுவோர் பங்கேற்கும் வாய்ப்பை அதிகரிக்க அவர்களுக்குப் போதுமான அவகாசம் அளியுங்கள்.
- அழைக்கப்பட்ட பங்கேற்பாளர்கள் பங்குபெறுவார்களா என்று அவர்களிடம் கேட்டு உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். உங்களுக்குச் சற்றுப் பெரிய குழு இருந்தால், அவற்றைச் சிறு குழுக்களாகப் பிரிப்பது பற்றி அல்லது கேள்விகளைப் பல பிரிவுகளில் கையாளப் பல சந்திப்புகளுக்கு இடச்சேவை அளிப்பது பற்றிப் பரிசீலியுங்கள்.
- பங்கேற்பாளர்களிடம் எந்தப் பின்னணிப் பொருட்களும் இருப்பதை அல்லது சந்திப்பின்போது நீங்கள் பார்க்கும் எந்தப் பொருட்களுக்கும் அணுகல் இருப்பதை உறுதிப்படுத்துங்கள்.
- ஒரு நிகழ்ச்சி நிரலை அமைத்து அதைச் சந்திப்புக்கு முன்பு பங்கேற்பாளர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

## தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பயிலுங்கள்

- நீங்கள் பயன்படுத்தத் திட்டமிடும் இணையவழிக் கருவியைப் பயன்படுத்துவதில் உங்களுக்குச் சிரமங்கள் எவையும் இல்லாதிருப்பதை உறுதிப்படுத்துங்கள்.
- நீங்கள் கலந்துரையாடலுக்கு இடச்சேவை அளிக்கும்போது தொழில்நுட்பத்தை இயக்க ஒரு தன்னார்வலரிடம் கேட்டுக்கொள்வது பற்றிப் பரிசீலியுங்கள்.
- எந்தப் பிரச்சினைகளையும் சரிசெய்ய ஓரிரு நாட்கள் முன்னதாக ஒரு பயிற்சி அமர்வை நடத்துங்கள்.
- ஒலி, காணொளி ஆகிய இரு இணைப்புகளையும் பரிசோதியுங்கள்.



## இடச்சேவை

- சந்திப்புக்கு இடச்சேவை அளிப்பவர் பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாவார்:
  - சந்திப்பைத் தொடங்குதல், முடித்தல்;
  - சந்திப்புக்கு வழிவகுத்தல் - சந்திப்பு தொடர்ந்து நடந்துகொண்டிருக்கச் செய்தல், நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றுதல், கூடுமான அளவு அதிக பங்கேற்பாளர்கள் பங்களிக்க ஒரு வாய்ப்பளித்தல் (கீழே உள்ள வழிவகுத்தல் உதவிக்குறிப்புகளைப் பாருங்கள்).
- இடச்சேவை அளிப்பவர் கலந்துரையாடப்படும் விஷயத்தில் நிபுணராக இருக்கத் தேவையில்லை, ஆனால் அவர்கள் உள்ளடக்கம், நிகழ்ச்சி நிரல், கேள்விகள் ஆகியவற்றை முன்கூட்டியே பரிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்.
- இடச்சேவை அளிப்பவர் இணையவழிப் படிவத்தைப் பயன்படுத்திக் குழுவின் சார்பாக ஒரு வழங்கலை அனுப்பலாம், ஆனால் பங்கேற்பாளர்களை அவர்கள் விரும்பினால் குறிப்புகள் எடுக்கவும் இணையவழிப் படிவத்தைப் பயன்படுத்தியும் TransformTO.ca இணையத்தளத்தில் கிடைக்கும் கருத்தாய்வின் மூலமும் தங்கள் யோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளவும் செய்யலாம்.

## வழிவகுத்தல் உதவிக்குறிப்புகள்

- எல்லோரையும் தங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளவும் நேரம் இருந்தால் ஏன் பங்கேற்க முடிவு செய்தார்கள் என்பது பற்றிச் சிறிது பேசவும் கேட்டுக்கொள்ளுங்கள்.
- கலந்துரையாடலுக்கு நீங்கள் தேர்வு செய்திருக்கும் நிகழ்ச்சி நிரலை அல்லது நிகழ்முறையை விவரித்துத் தொடங்குங்கள், ஏதேனும் கேள்விகள் கேட்க வேண்டுமா என்று கேளுங்கள்.
- நேரம் இருந்தால் எல்லோரையும் ஒரு முதல் அல்லது கடைசி எண்ணத்தைக் கூற அனுமதிக்கும் ஒரு சுழற்சிமுறைப் பகிர்வில் தொடங்குங்கள் அல்லது முடியுங்கள்.



- உரையாடலை அதற்குரிய தலைப்பில் வைத்திருங்கள், மக்கள் தடம் மாறினால் கலந்துரையாடல் கேள்விகளைப் பற்றி அவர்களுக்கு நினைவூட்டுங்கள்.
- அமைதியாக இருக்கும் பங்கேற்பாளர்களிடம் அவர்கள் ஏதேனும் யோசனைகளைச் சேர்க்க விரும்புகிறார்களா என்று கேட்டு அவர்களை உரையாடலுக்குள் கொண்டுவாருங்கள்; அதே சமயத்தில் அவர்கள் எதுவும் சொல்லாமல் இருக்கும் விருப்பத் தேர்வையும் அளியுங்கள். நிறைய பேசுபவர்களிடம், இன்னும் பேசாத மற்றவர்களைப் பங்களிக்க அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்ளுங்கள்.
- சந்திப்பின்போது மக்களை அரட்டை வசதிகள் அல்லது மின்னஞ்சல் போன்ற மாற்று வழிமுறைகளின் மூலம் கருத்துரைகளை அல்லது கருத்துப்பதிவை அளிக்கும்படி யோசனை கூறுங்கள்.
- அவர்கள் உங்களிடம் சொல்வதைத் திருப்பிச் சொல்லுங்கள், தேவைப்படும்போது தெளிவுபடுத்தும்படி கோருங்கள்.
- எல்லாம் தடையின்றியும் நேரப்படியும் நிகழச் செய்யுங்கள் – கடிகாரத்தின் மீது கண் வைத்திருங்கள்!
- மிரட்டி அல்லது மரியாதையின்றிப் பேச அனுதிக்காதீர்கள். பங்கேற்பாளர்கள் மற்றவர்களின் கருத்துக்களை மதிக்க வேண்டும், ஆனால் ஒருவர் மரியாதையின்றி ஏதாவது சொன்னால், கலந்துரையாடல் நட்பார்ந்ததாகவும் அரவணைப்பதாகவும் இருக்க வேண்டும் என்று குழுவினருக்கு நினைவூட்டுங்கள்.
- மெய்நிகர் சந்திப்புகளில், எல்லோரும் ஒலிமுடக்கியிருந்தால் அல்லது எல்லோரும் ஒரே சமயத்தில் பேசினால், யார் பேச விரும்புகிறார்கள் என்று அறிவது சில சமயங்களில் கடினமாக இருக்கும். நிழற்படக் கருவிகள் செயல்பாட்டில் இருக்கும்போது, மக்களை தாங்கள் பேசக் கேட்டுக்கொள்ளக் கையை உயர்த்தும்படி அல்லது ஒரு வாசகப் பலகையைக் காட்டும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளலாம். சில இணையவழி சந்திப்பு மேடைகளில் கையை உயர்த்தும் செயல்பாடு உள்ளது அல்லது பங்கேற்பாளர்கள் ஒரு நெறியாளருடன் தனியாகப் பேச அனுமதிக்கும் செயல்பாடு உள்ளது. சிறு குழுக்கள் என்றால் எல்லோருக்கும் ஒருமுறை பேச வாய்ப்பு கிடைப்பதை உறுதிப்படுத்த ஒவ்வொருவரையும் ஒருமுறையாவது பெயர் சொல்லி அழைப்பது குறித்து நீங்கள் பரிசீலிக்கலாம்.



## பிற பொறுப்புகளைத் தேர்வு செய்யுங்கள்

- இடச்சேவை அளிப்பதற்குக் கூடுதலாக நீங்கள் பின்வருவோரையும் தேர்வுசெய்வது குறித்துப் பரிசீலிக்கலாம்:
    - **குறிப்பெடுப்பவர்**: சந்திப்பின்போது குறிப்புகள் எடுத்து, அந்தக் குறிப்புகளைப் பங்கேற்பாளர்களுக்கு மின்னஞ்சலில் அனுப்புகிறார், கலந்துரையாடலின் விவரச்சுருக்கத்தைச் சமர்ப்பிக்கிறார். நீங்கள் கலந்துரையாடலுக்காகச் சிறு குழுக்களாகப் பிரித்தால், ஒவ்வொரு குழுவிலும் ஒரு குறிப்பெடுப்பவரை இருக்கச் செய்யுங்கள். குறிப்பெடுப்பவர்கள் மின்னணு ரீதியாகவோ அச்சீடுகளைப் பயன்படுத்தியோ குறிப்புகள் எடுக்கலாம். சில மெய்நிகர் சந்திப்பு மென்பொருட்களில் குறிப்பெடுக்கும் வசதியும் அடங்கியுள்ளது – இந்தக் கருவி இருந்தால் பயன்படுத்துங்கள்.
    - **தொழில்நுட்ப ஆதரவு வழங்குநர்**: தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உதவுகிறார். சந்திப்பின்போது ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் பங்கேற்பாளர்களிடம் தொழில்நுட்ப ஆதரவுக்கான தொடர்புத் தகவல்கள் இருப்பதை உறுதிப்படுத்துங்கள்.

## கலந்துரையாடலை எப்படி ஒழுங்குசெய்வீர்கள் என முடிவு செய்யுங்கள்

- எத்தனை பேரை எதிர்பார்க்கலாம் என்று நீங்கள் அறியும் வகையில் மறுமொழி கோருங்கள் (RSVP). பங்கேற்பாளர்கள் எண்ணிக்கை சிறிதாக இருந்தால் (8 அல்லது அதைவிடக் குறைவு) நீங்கள் கேள்விகளைக் கேட்டு எல்லாக் கேள்விகளுக்கும் ஒன்றாக பதிலளிக்கலாம். சற்றுப் பெரிய குழுவாக இருந்தால் (9 பேர் அல்லது அதைவிட அதிகமானவர்கள்) கேள்விகளைப் பிரிவுகளில் கேட்பதற்குச் சிறு குழுக்களாகப் பிரிப்பது பற்றிப் பரிசீலியுங்கள்; இதனால் கலந்துரையாடப்பட்ட விஷயங்கள் குறித்து ஒருவரிடம் ஒருவர் தெரிவித்துக்கொள்ள நேரம் கிடைக்கும். உங்கள் கலந்துரையாடலைக் கட்டமைக்கப் பயன்படுத்தச் சில மாதிரி நிகழ்ச்சி நிரல்களை நாங்கள் சேர்த்திருக்கிறோம்.



## பின்னணிப் பொருட்களை வழங்குங்கள்

- உங்கள் பங்கேற்பாளர்களுக்கு இந்தக் கலந்துரையாடல் வழிகாட்டியின் மின்னணு வடிவம் ஒன்றை வழங்குங்கள். பங்கேற்பாளர்களைச் சந்திப்புக்கு முன்பு வழிகாட்டியை முழுமையாகப் படிக்கும்படி யோசனை கூறுங்கள்.

## உங்கள் உரையாடலுக்கு இடச்சேவை அளியுங்கள்

- ஒவ்வொரு நபரிடமும் அவரது சொந்தக் கருத்தை மட்டும் கேட்காமல் ஒருமித்த கருத்தைப் பெற முயலுங்கள். இதனால் கலந்துரையாடல் இன்னும் நன்றாக நடக்கும். மறக்காமல் நன்றாகக் குறிப்பெடுங்கள்!

## உங்கள் குழுவின் மெய்நிகர் நிழற்படம் (திரைப்படிமம்) ஒன்று எடுங்கள்.

- அதை நீங்கள் உங்கள் குறிப்புகளுடன் சேர்த்து இணையப் படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கலாம். அந்த நிழற்படம் பின்னர் நகரத்துடன் பகிரப்படும் என்பதை நிழற்படத்தில் உள்ள அனைவரும் அறிந்திருப்பதையும் அதற்கு ஒப்புதல் அளிப்பதையும் தயவுசெய்து உறுதிப்படுத்துங்கள்.

## பங்கேற்பாளர்களை ஒரு தகவல் படிவத்தை நிரப்பச் செய்யுங்கள்.

- உங்கள் உரையாடலில் பங்கேற்றவர்களை நாங்கள் இன்னும் நன்றாகப் புரிந்துகொள்ள உதவ, பங்கேற்பாளர்களை இந்தச் சுட்டியில் உள்ள பங்கேற்பாளர் தகவல் படிவத்தை நிரப்பச் செய்யுங்கள்.

## கருத்துப்பதிவைப் பகிர்தல்

- இந்தச் சுட்டியைப் பயன்படுத்தி உங்கள் குழுவின் கலந்துரையாடலைச் சுருக்கமாக விளக்கி உங்கள் கருத்துப்பதிவை இணையவழி சமர்ப்பியுங்கள்: https://s.cotsurvey.chkmkt.com/DiscussionGuideSubmission



- பங்கேற்பாளர்கள் விரும்பினால் தங்கள் கருத்துப்பதிவைத் தனிப்பட்ட முறையில் TransformTO.ca இணையத்தளத்தில் உள்ள இணையவழிக் கருத்தாய்வின் மூலம் சமர்ப்பிக்கும்படியும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.
- **தயவுசெய்து உங்கள் கருத்துப்பதிவை ஜூலை 26, 2021-க்குள் வழங்குங்கள்**.

## மாதிரி நிகழ்ச்சி நிரல்

| உருப்படி # | விவரிப்பு | பரிந்துரைக்கப்படும் நேரம் |
|---|---|---|
| 1 | **மெய்நிகர் கலந்துரையாடல் தொடங்குகிறது**<br>• பங்கேற்பாளர்களை இணையவழி மெய்நிகர் வெளியில் சேர அனுமதியுங்கள். | 5 நிமிடங்கள் |
| 2 | **வரவேற்பு அளியுங்கள்** | 3 நிமிடங்கள் |
| 3 | **நில அறிந்தேற்பு** | 2 நிமிடங்கள் |
| 4 | **நிகழ்ச்சி நிரலை மீள்பார்வையிடுங்கள்** | 5 நிமிடங்கள் |
| 5 | **பின்னணித் தகவல்கள் மற்றும் காணொளியின் மீள்பார்வை**<br>• பொருட்கள் TransformTO.ca இணையத்தளத்தில் கிடைக்கும்; நேரத்தை மிச்சப்படுத்தப் பொருட்கள் முன்னதாகவும் மீள்பார்வையிடப்படலாம். | 10 நிமிடங்கள் |
| 6 | **கலந்துரையாடல் – 1-3 வரையிலான கேள்வி எண்கள்**<br>• ஒரு கேள்வி 10-15 நிமிடங்கள் எடுத்துக்கொள்ள அனுமதியுங்கள். | 30-45 நிமிடங்கள் |
| 7 | **முடிவுரை, நன்றியுரை மற்றும் அடுத்த நடவடிக்கைகள்** | 5 நிமிடங்கள் |
| | **மொத்த நேரம்:** | **60-75 நிமிடங்கள்** |



## மாதிரி விரிவான நிகழ்ச்சி நிரல்

| உருப்படி # | விவரிப்பு | பரிந்துரைக்கப்படும் நேரம் |
|---|---|---|
| 1 | **மெய்நிகர் ஈடுபாடு தொடங்குகிறது**<br>• பங்கேற்பாளர்களை இணையவழி மெய்நிகர் வெளியில் (எ.கா., WebEx, Skype, Google Hangout முதலியவை) சேர அனுமதியுங்கள்.<br>• பங்கேற்பாளர்கள் நிகழ்வு முழுவதிலும் சேரலாம் அல்லது வெளியேறலாம். அவர்களில் அனைவரும் திரையில் தெரியாமல் போகலாம்.<br>• பங்கேற்பாளர்களை அடையாளம் கண்டு சிறிது பேசிக்கொண்டிருக்க நேரம் ஒதுக்குங்கள், ஆனால் முக்கியமான தகவல்கள் எவற்றையும் சொல்லாதீர்கள். ஏனென்றால் அந்தத் தகவல்களில் சிலவற்றை அல்லது அனைத்தையும் பெரும்பாலான பங்கேற்பாளர்கள் கேட்காதிருக்கக்கூடும்.<br>• பங்கேற்புத் தகவல் படிவத்தின் சுட்டியை அரட்டையில் வெளியிடுங்கள், நிறைவு செய்யும்படி மக்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள்: https://s.cotsurvey.chkmkt.com/ParticipantInfoCard | 5 நிமிடங்கள் |
| 2 | **ஈடுபாட்டுக்கு வரவேற்பு**<br>• சந்திப்பு தொடங்குவதை முறைப்படி தெரிவியுங்கள்.<br>• எல்லா பங்கேற்பாளர்களும் கூடுமான வரை மற்றவர் பேசுவதைக் கேட்க, அவர்கள் பேசாமல் இருக்கும்போது ஒலிமுடக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுங்கள்.<br>• ஒலிமுடக்குவதற்கும் சந்திப்பின் அடிப்படைச் செயல்குறிப்புகளை / விதிகளை வழங்குவதற்கும் பயிற்சிசெய்ய இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக, பெரிய சந்திப்புகளில் கை உயர்த்துதல் செயல்பாட்டைப் பயன்படுத்துதல், அரட்டையைப் பயன்படுத்துதல், விரும்பினால் காணொளியைப் பயன்படுத்துதல் (சில பயனர்கள் தங்கள் காணொளியை அணைத்துவைத்திருந்தால் நிம்மதியாக உணரலாம்) | 3 நிமிடங்கள் |



| உரு ப்படி # | விவரிப்பு | பரிந்துரைக்கப் படும் நேரம் |
|---|---|---|
| | முதலியவை போன்ற உதவிக்குறிப்புகளை நீங்கள் பகிரலாம். | |
| **3** | **நில அறிந்தேற்பு**<br>• ஒரு நிகழ்வின் அல்லது சந்திப்பின் தொடக்கத்தில் ஒரு நில அறிந்தேற்பை வழங்குவது சிந்தித்துப்பார்க்கச் சிறிது நேரம் அளிக்கிறது, பூர்வகுடி நிலங்கள், உடன்படிக்கைகள், மக்கள் ஆகியோரை அங்கீகரிப்பதைக் காட்டுகிறது. மேலும் அறிய இங்கு வருகை தாருங்கள்.<br>• சந்திப்பு எங்கு நடக்கிறது என்பதைப் பொறுத்து இரண்டு வடிவங்கள் இருக்கின்றன:<br>◦ வடிவம் 1: நீங்கள் கலந்துரையாடலை எட்டோபிக்கோ, வடக்கு யார்க், யார்க், கிழக்கு யார்க் அல்லது டொரன்டோவில் நடத்துகிறீர்கள் என்றால்: *நாம் க்ரெடிட்டின் மிசிசாகாக்கள், அனிஷ்னாபெக், சிப்பேவா, ஹோடெனோஷானி மற்றும் வெண்டாட் மக்கள் உட்படப் பல நாடுகளின் மரபார்ந்த எல்லைக்குள் இருக்கின்ற, பல பன்முகமான முதல் நாடுகள், இனுயிட் மற்றும் மெட்டிஸ் மக்களுக்கு இப்போது தாயகமாக உள்ள நிலத்தில் சந்திக்கிறோம் என்பதை நாம் அறிந்தேற்கிறோம். டொரன்டோ நகரம் க்ரெடிட்டின் மிசிசாகாக்களுடனான உடன்படிக்கை 13-இன் ஆளுகைக்குள் வருகிறது என்பதையும் நாம் அறிந்தேற்கிறோம்.*<br>◦ வடிவம் 2: நீங்கள் ஸ்கார்பரோவில் கலந்துரையாடலுக்கு இடச்சேவை அளித்தால்: *நான் இன்று நிற்கும் நிலமானது க்ரெடிட்டின் மிசிசாகாக்கள், அனிஷ்னாபெக், சிப்பேவா, ஹோடெனோஷானி மற்றும் வெண்டாட் மக்கள் உட்படப் பல நாடுகளின் மரபார்ந்த எல்லைக்குள் இருக்கின்ற, பல பன்முகமான முதல் நாடுகள், இனுயிட் மற்றும் மெட்டிஸ் மக்களுக்கு இப்போது தாயகமாக உள்ள இடமாகும். க்ரெடிட்டின் மிசிசாகாக்களுடன்* | 2 நிமிடங்கள் |



| உரு ப்படி # | விவரிப்பு | பரிந்து ரைக்கப் படும் நேரம் |
|---|---|---|
| | *கையொப்பமிட்ட உடன்படிக்கை 13, பல மிசிகாகா மற்றும் சிப்பேவா குழுக்களுடன் கையொப்பமிட்ட வில்லியம்ஸ் உடன்படிக்கைகள் ஆகியவற்றுக்கு டொரன்டோ உட்பட்டுள்ளது என்பதையும் நான் அறிந்தேற்கிறேன்.* | |
| 4 | **நிகழ்ச்சி நிரலை மீள்பார்வையிடுங்கள்** | 5 நிமிடங் கள் |
| 5 | **பின்னணித் தகவல்கள் மற்றும் காணொளி விளக்கக்காட்சியின் மீள்பார்வை**<br>• TransformTO.ca இணையத்தளத்தில் இருக்கும் கலந்துரையாடல் வழிகாட்டியைத் திறக்கும்படி/தரவிறக்கும்படி எல்லோரிடமும் கேட்டுக்கொள்ளுங்கள்.<br>• கலந்துரையாடல் வழிகாட்டியின் (பின்னணித் தகவல்கள் மற்றும் காலநிலை நடவடிக்கைகள்) விவரச்சுருக்கம் ஒன்றை வழங்குங்கள்; நேரத்தை மிச்சப்படுத்தப் பொருட்கள் முன்னதாகவும் மீள்பார்வையிடப்படலாம். | 10 நிமிடங் கள் |
| 6 | **கலந்துரையாடல் – 1-3 வரையிலான கேள்வி எண்கள்**<br>• வழிகாட்டியில் உள்ள எந்த அல்லது எல்லாக் கேள்விகளையும் தேர்வு செய்யுங்கள்.<br>• கேள்விகள், கருத்துரைகள், பதில்கள் அல்லது பொதுவான கருத்துப் பகிர்வுகளைச் சமர்ப்பிக்கவும் பயனர்களை அனுமதிக்க “அரட்டை” செயல்பாட்டைப் பயன்படுத்துவது குறித்துப் பரிசீலியுங்கள் (இத்தகையதொரு செயல்பாட்டை இணையவழி ஈடுபாட்டு மேடை அளித்தால்).<br>• எல்லா பங்கேற்பாளர்களும் ஒப்புக்கொண்டால் தவிர அமர்வைப் பதிவு செய்யாதீர்கள்.<br>• ஒரு கேள்வி 10-15 நிமிடங்கள் எடுத்துக்கொள்ள அனுமதியுங்கள்; *நினைவிருக்கட்டும்: சந்திப்புகளை ஒரு நியாயமான நேர வரம்புக்குள் வைத்திருக்கப் பல அமர்வுகள் நடத்தப்படலாம்.* | 30-45 நிமிடங் கள் |



| உருப்படி # | விவரிப்பு | பரிந்துரைக்கப்படும் நேரம் |
|---|---|---|
| **7** | **முடிவுரை, நன்றியுரை மற்றும் அடுத்த நடவடிக்கைகள்**<br>• எல்லா பங்கேற்பாளர்களுக்கும் கலந்துரையாடலுக்கு அவர்களுடைய பங்களிப்புக்காக நன்றி கூறுங்கள்.<br>• பங்கேற்பாளர்கள் கலந்துரையாடல் வழிகாட்டிக் கேள்விகளுக்கு அவர்களது பதில்களை அளிப்பதற்கு உள்ள விருப்பத் தேர்வுகளை நினைவூட்டுங்கள், அல்லது நீங்கள் குழுவாகச் சமர்ப்பிப்பீர்கள் என்று நினைவூட்டுங்கள்:<br>◦ இணையவழி: https://s.cotsurvey.chkmkt.com/DiscussionGuideSubmission<br>◦ மின்னஞ்சல் மூலம்: Transform@toronto.ca<br>• நகரம் **ஜூலை 26, 2021** வரை எல்லா கருத்துப் பகிர்வுகளையும் சேகரிக்கும்.<br>• எல்லா கருத்துப் பகிர்வுகளும் சுருக்கப்பட்டு டொரன்டோவின் திறந்த தரவு வலைவாசலில் வெளியிடப்படும் – www.toronto.ca/Open. இந்த ஏற்பாடுகளைப் பற்றிய மற்றும் நகர சபைக்கான தெரிவிப்புகள் உட்பட ட்ரான்ஸ்ஃபார்ம்TO குறித்த மேலதிகத் தகவல்கள் TransformTO.ca இணையத்தளத்தில் கிடைக்கின்றன. | 5 நிமிடங்கள் |
| | **மொத்த நேரம்:** | **60-75 நிமிடங்கள்** |



# ட்ரான்ஸ்ஃபார்ம்TO நிகர பூஜ்ய வியூகம் மற்றும் காலநிலை நடவடிக்கைகள் குறித்த பின்னணித் தகவல்கள்



# ட்ரான்ஸ்ஃபார்ம்TO நிகர பூஜ்ய வியூகம் மற்றும் காலநிலை நடவடிக்கைகள் குறித்த பின்னணித் தகவல்கள்

## ட்ரான்ஸ்ஃபார்ம்TO நிகர பூஜ்ய வியூகம் என்பது என்ன?

ட்ரான்ஸ்ஃபார்ம்TO என்பது டொரன்டோவின் காலநிலை நடவடிக்க வியூகமாகும். நம் நகரத்தின் பசுமை இல்ல வாயு உமிழ்வுகளைக் குறைத்து அதே சமயத்தில் நம் உடல்நலத்தை மேம்படுத்துதல், சமூகச் சமத்துவத்திற்கு முன்னேற்றம் அளித்தல், நமது பொருளாதாரத்தை வளர்த்தல், காலநிலைக்குத் தாக்குப்பிடிக்கும் திறனை அதிகரித்தல் ஆகியவற்றைச் செய்வதே அதன் இலக்கு.

### பசுமை இல்ல வாயுக்கள் என்பவை யாவை?

கரியமில வாயு ($CO_2$), மீத்தேன் ($CH_4$) போன்ற பசுமை இல்ல வாயுக்கள், உயிர்கள் தழைக்குமளவுக்கு நமது கிரகத்தைக் கதகதப்பாக வைத்திருக்கத் தேவையானவை. இருந்தாலும், அவை அளவுக்கதிகமாக இருந்தால் வெப்பம் புவியின் வளிமண்டலத்திலிருந்து வெளியேறுவதைத் தடுக்கின்றன. இதனால் புவி வெப்பமடைந்து வளிமண்டலத்தில் சமநிலையின்மைகளை உருவாக்குகின்றன. இவை இன்னும் நிலையற்ற மற்றும் கடுமையான வானிலை நிகழ்வுகளை விளைவிக்கின்றன.



## நிகர பூஜ்யத்தை எட்டுதல், யாரையும் விலக்காமல்

சமீபத்திய ஆண்டுகளில், வெப்பமைடந்துவரும் காலநிலையின் தாக்கங்களை நாம் உணர்ந்திருக்கிறோம். கார்பன் மாசுபாட்டினால் காலநிலை அபாயங்கள் அதிகரிக்கையில் டொரன்டோவின் வெப்பநிலை இன்னும் சூடாக, ஈரமாக, கட்டுப்பாடின்றி மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது **– அதோடு உலகெங்கும் மிகக் கடுமையான வானிலை நிகழ்வுகள் இன்னும் அதிக சமயங்களிலும் இன்னும் தீவிரமாகவும் நிகழும் என்று கணிக்கப்படுகிறது**; முன்பே டொரன்டோ வாசிகளும் தொழில் நிறுவனங்களும் வெள்ளம் மற்றும் பிற கடுமையான வானிலை நிகழ்வுகளை அனுபவித்துவருகிறார்கள். நாம் விரைவாகவும் அவசரமாகவும் செயல்பட வேண்டும்.

## எவ்வளவு விரைவோ அவ்வளவு நல்லது.

அக்டோபர் 2019-இல், டொரன்டோவில் ஒரு காலநிலை அவசரநிலையைப் பிரகடனம் செய்வதற்கும் காலநிலை மாற்றத்தை மட்டுப்படுத்தவும் அதற்கேற்ப மாறிக்கொள்ளவும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளை விரைவாக்குவதற்கும் நகர சபை ஒருமனதாக வாக்களித்தது.

### இதைச் செய்து முடிப்போம் TO!

டொரன்டோ தனது பசுமை இல்ல வாயு உமிழ்வுகளை 1990 அளவுகளுக்குக் கீழ் 40% குறைத்திருக்கிறது.

இதற்குப் பதில்வினையாக, நாங்கள் 2050-ஆம் ஆண்டுக்குள் அல்லது இன்னும் முன்னதாக நிகர பூஜ்யம் என்ற விரைவாக்கிய உமிழ்வுக்



குறைப்பு இலக்கை நோக்கிச் செல்லும் வகையில் தொடக்க ட்ரான்ஸ்ஃபார்ம் TO திட்டத்தை மறு ஒத்திசைவு செய்கிறோம்; இன்னும் வாழத்தக்க மற்றும் செழிப்பான டொரன்டோவை உருவாக்குகிறோம். நமது பசுமை இல்ல வாயு உமிழ்வுகளை 2030-ஆம் ஆண்டுக்குள் 1990-ஆம் ஆண்டு அளவுகளிலிருந்து 65 சதவீதமாகக் குறைப்பது என்ற குறுகியகால இலக்குகளும் இந்தத் துணிச்சலான நிகர பூஜ்ய வியூகத்தில் அடங்கும்.

## துணிச்சலான நகர்வுகளால் இயங்கும் நிகர பூஜ்யம்

துணிச்சலான நகர்வுகளால்தான் நிகர பூஜ்யம் இயங்குகிறது என்பதை நாம் அறிவோம். நிகர பூஜ்யத்தை எட்டுவதற்கு நமது 2030 உமிழ்வுக் குறைப்பு இலக்குகளை அடைய உடனடி காலநிலை நடவடிக்கை தேவைப்படுகிறது. இந்த ஆலோசனைக் காலத்தின்போது நீங்கள் செய்யும் கருத்துப் பகிர்வு, வரும் இலையுதிர்காலத்தில் டொரன்டோ நகர சபையிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கும் நிகர பூஜ்ய வியூகத்திற்கான தகவல்களை அளிக்கும்.


## நாம் நிகர பூஜ்யத்தை எட்டுவது எப்படி?

### நிகர பூஜ்யம் என்றால் என்ன?

நாம் உற்பத்தி செய்யும் பசுமை இல்ல வாயுக்கள் சாத்தியமான வரை பூஜ்யத்திற்கு அருகில் இருக்கும்படி நாம் நமது நகரத்தைக் கரிநீக்கம் செய்யும்போதும், அதாவது நாம் ஆற்றலை நகர்த்தும், கட்டமைக்கும், பயன்படுத்தும், உருவாக்கும் விதத்தையும் நமது கழிவை அப்புறப்படுத்தும் விதத்தையும் மாற்றும்போதும், ‘நிகர பூஜ்யம்’ அடையப்படுகிறது.




நாம் அவசரமாகச் செயல்பட்டால் 2050-ஆம் ஆண்டுக்குள் அல்லது அதற்கு முன்னதாக டொரன்டோவை நிகர பூஜ்யத்தை அடையச் செய்யலாம். நாம் நமது நகரத்தில் உள்ள பெரிய பசுமை இல்ல வாயு உமிழ்வு ஆதாரங்களைக் குறிவைக்கும் காலநிலை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். நமது 2030 பசுமை இல்ல வாயு உமிழ்வுக் குறைப்பு இலக்கை எட்டுவது நம்மை நிகர பூஜ்யத்திற்கான சரியான பாதையில் செலுத்தும்.




நமது 2030 இலக்குகளை அடைய உதவிசெய்து நம்மை நிகர பூஜ்யத்திற்கான சரியான பாதையில் செலுத்த உதவும் காலநிலை நடவடிக்கைகளும் நமது ட்ரான்ஸ்ஃபார்ம்TO நிகர பூஜ்ய வியூகத்தில் அடங்கும். டொரன்டோ வாசிகளின் முந்தைய பதிவுகளைக் கொண்டு நாங்கள் டொரன்டோவில் இருக்கும் மிகப்பெரிய பசுமை இல்ல வாயு ஆதாரங்களில் ஒவ்வொன்றிலும் உமிழ்வுகளைக் குறைப்பதற்கான முக்கிய காலநிலை நடவடிக்கைகளை அடையாளம் கண்டுள்ளோம்.






மேற்கண்ட விளக்கப்படம், டொரன்டோவில் உள்ள முக்கியத் துறைகளின் ஒப்பீட்டளவிலான உமிழ்வுக் குறைப்புத் திறனைக் காட்டுகிறது. நகரத்தின் உமிழ்வுகளில் பெருமளவைக் கட்டிடங்களும் போக்குவரத்தும் ஏற்படுத்துகின்றன என்பதைக் கருத்தில் கொண்டால், இந்தத் துறைகளில்தான் குறைப்புக்கான மிக அதிகத் திறன் உள்ளது; இருந்தாலும், ஆற்றல், நுகர்வு/கழிவு ஆகியவற்றிலும், அதோடு நியாயமான ஈடுபாடு மற்றும் முடிவெடுத்தலிலும் காலநிலை நடவடிக்கைகள் இன்றியமையாதவை. எல்லா நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்படும்போது, நம் நகரத்தில் பசுமை இல்ல வாயு உமிழ்வுகள் **நிகர பூஜ்யத்தை** அடையும். **நிகர பூஜ்யத்தை** முழுமையாகச் சாதிப்பதற்கு, குறைந்த கார்பன் உள்ள ஆற்றல் வலையமைப்பு மற்றும் குறைக்கப்பட்ட இயற்கை வாயுச் சார்பை உறுதிப்படுத்த அரசின் எல்லா மட்டங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்.



## நிகர பூஜ்யத்தை எட்டுவதில் உள்ள பலன்கள் யாவை?

நமது பசுமை இல்ல வாயு உமிழ்வுகளைக் குறைத்து நிகர பூஜ்யத்தை எட்டுவது நமது காலநிலையைப் பாதுகாப்பதற்கான உலகளாவிய நடவடிக்கைக்குப் பங்களித்து, காலநிலை பாதிப்புக்கு டொரன்டோ இன்னும் நன்றாகத் தாக்குப்பிடிக்க வழிவகுக்கும். அதாவது, குறைந்த கார்பனைக் கொண்டதாகவும் ஆற்றல் சேமிப்பதாகவும், அதோடு எதிர்கால வெப்ப அலைகள், வெள்ளம், உறைபனிப் புயல்கள் ஆகியவற்றின் அழுத்தத்தையும் அதிர்ச்சிகளையும் தாங்கி நிற்க இன்னும் நல்ல தயார்நிலையிலும் உள்ள ஒரு நகரத்தை உருவாக்குவோம்.

உமிழ்வுகளை நிகர பூஜ்யமாகக் குறைத்தல், இன்னும் பசுமையான, குறைந்த கார்பன் உள்ள டொரன்டோவை உருவாக்குவதற்கு அப்பாற்பட்ட பலன்களை அளிக்கிறது, எ.கா., சமூகச் சமத்துவத்தை மேம்படுத்துதல். சமத்துவம், செழிப்பு, உடல்நலம் ஆகிய விஷயங்களைத் தொடுகின்ற, டொரன்டோவில் உள்ள எந்தக் குறிப்பான சமூகத்தினர் மீதும் நியாயமற்ற தாக்கத்தை ஏற்படுத்தாத நடவடிக்கைகளும் இதில் அடங்கும்.

ஒரு நிகர பூஜ்யப் பாதையில் செல்வது நமது ஒட்டுமொத்த உடல்நலத்தை மேம்படுத்தும் என்றும் 2020-2050 ஆண்டுகளுக்கிடையே பல புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் நமது காலநிலை நடவடிக்கை மாதிரியாக்கம் காட்டுகிறது. நாம் சமூகச் சுகாதாரம் மற்றும் கோவிட்-19 பெருந்தொற்றிலிருந்து பொருளாதார மீட்சியை அடைய முயலும் வேளையில் இது முக்கியமானது.

பசுமை இல்ல வாயு உமிழ்வுகளைக் குறைக்கும் காலநிலை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் குடும்பங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆற்றல் செலவுகளில் தோராயமாக $1,500 மிச்சப்படுத்தலாம் என்றும் நமது மாதிரியாக்கம் நமக்குக் காட்டுகிறது. எனவே, நாம் இன்னும் ஆரோக்கியமான, குறைந்த கார்பன் கொண்ட டொரன்டோவை உருவாக்கும் அதே சமயத்தில் பணத்தையும் மிச்சப்படுத்துகிறோம்!



# நிகர பூஜ்யக் காலநிலை நடவடிக்கைகள்

மிகப்பெரிய உள்ளூர் பசுமை இல்ல வாயு உமிழ்வு ஆதாரங்களில் கவனம் குவிக்கும் துணிச்சலான காலநிலை நடவடிக்கைகளும் ட்ரான்ஸ்ஃபார்ம்TO நிகர பூஜ்ய வியூகத்தில் அடங்கும். பசுமைவெளிகளை மேம்படுத்துவதற்கும் நகரத்தை இன்னும் வாழத்தக்கதாக, குறைந்த கார்பன் கொண்டதாக ஆக்குவதற்கான பிற முயற்சிகளுக்குமான நடவடிக்கைகளும் இதில் அடங்கும்.

## கட்டிடங்கள்

நமது மிகச் சமீபத்திய பசுமை இல்ல வாயு விவரப்பட்டியலின்படி (Greenhouse Gas Inventory), உள்ளூர் பசுமை இல்ல வாயு உமிழ்வுகளில் 55 சதவீதம் நமது கட்டிடங்களில் பயன்படுத்தப்படும் ஆற்றலிலிருந்து வருகிறது; அவை புதைபடிவ எரிபொருட்களை ஓர் ஆற்றல் ஆதாரமாகப் பயன்படுத்தும்போதும் உற்பத்தி மற்றும் கட்டுமானத்தின்போதும் பசுமை இல்ல வாயுக்களை உமிழ்கின்றன. கட்டிடங்களுக்கு வெப்பமூட்டுவதற்கான இயற்கை வாயு நுகர்வுதான் சமூகமெங்கும் மிகப்பெரிய உமிழ்வு ஆதாரமாக உள்ளது; இதுதான் டொரன்டோவில் ஏற்படும் உமிழ்வுகள் மொத்தத்திலும் தோராயமாக 50 சதவீதம் இருக்கிறது.

நமது 2030 குறைப்பு இலக்குகளை எட்டவும் 2050-க்குள் அல்லது அதற்கு முன்னதாக நிகர பூஜ்யத்தை அடையவும், புதிய கட்டுமானப் பணிகள் கிட்டத்தட்ட பூஜ்ய உமிழ்வுகளைக் கொண்டிருப்பதையும் குறைந்த அளவு கார்பனைக் கொண்ட பொருட்களைப் பயன்படுத்துவதையும் உறுதிப்படுத்துவதில் நாம் கவனம் குவிக்க வேண்டும். ஆற்றல் நுகர்வைக் குறைக்கவும் குறைந்த கார்பனைக் கொண்ட ஆற்றல் ஆதாரங்களுக்கு மாறவும் நாம் முன்பே உள்ள கட்டிடங்களுக்கு இற்றைப்பொருத்தம் செய்யவும் வேண்டும்.



நமது கட்டிடங்களின் பசுமை இல்ல வாயு உமிழ்வுகளைக் குறைக்க நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாவன:



### புதிய கட்டிடங்களுக்கு...

**நடவடிக்கை:** புதிய நிலைகளுக்கான டொரன்டோ பசுமைத் தரநிலை (Toronto Green Standard) வளங்குன்றா வடிவமைப்புத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதைத் தொடர்தல், தனியார் கட்டிடங்கள் 2030-க்குள் அல்லது அதற்கு முன்னதாக நிகர பூஜ்யத்திற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று விதித்தல்.

**நடவடிக்கை:** நகரத்திற்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு நிகர பூஜ்ய உமிழ்வுகள் இருக்க வேண்டும் என விதித்தல்.

**நடவடிக்கை:** புதிய கட்டுமானத்திற்குக் குறைந்த கார்பனைக் கொண்ட பொருட்களைப் பயன்படுத்தக் கட்டிட உரிமையாளர்களுக்கு ஆதரவளித்தல்.

### முன்பே உள்ள கட்டிடங்களுக்கு...

**நடவடிக்கை:** வீடுகள் மற்றும் கட்டிடங்களிலிருந்து வரும் பசுமை இல்ல வாயு உமிழ்வுகள் குறித்துத் தெரிவிக்கவும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் தேவைப்பாடுகளை அமைத்தல்.

**நடவடிக்கை:** செயல்திறன், சௌகரியம், புதைபடிவ எரிபொருள் மூலமான வெப்பமூட்டும் முறையிலிருந்து மாறுதல் ஆகியவற்றை மேம்படுத்தி, வீட்டு மற்றும் கட்டிட உரிமையாளர்களுக்குக் கட்டுபடியாக்கும் இற்றைப்பொருத்தங்களைச் செய்யத் தொடக்க நடவடிக்கைக்கு ஆதரவளித்தல்.

**நடவடிக்கை:** முன்பே உள்ள கட்டிடங்களுக்குப் பூஜ்ய உமிழ்வு இற்றைப்பொருத்தங்களை அதிகரிப்பதற்காக விரைவான சந்தை உருமாற்றத்திற்கு வழிசெய்ய, கட்டிடத் துறையில் வேலைகளை உருவாக்குவதற்கு ஆதரவளித்தல், தொழில்துறைத் திறனை வளர்த்தல்.






## ஆற்றல்

ஒரு நகரம் என்ற முறையில், நாம் நிறைய ஆற்றலைப் பயன்படுத்துகிறோம் – குறிப்பாக நமது கட்டிடங்களில் (மேற்கண்டவாறு). ஆனால் நாம் தற்போது டொரன்டோவில் நமது சொந்த ஆற்றலில் மிகக் குறைந்த அளவை உற்பத்தி செய்கிறோம். ஏனென்றால் பெருமளவு ஆற்றல், மாகாண மின்சக்தி வலையமைப்பிலிருந்து வருகிறது.

நமது 2030 குறைப்பு இலக்குகளை எட்டவும் 2050 அதற்கு முன்னதாக நிகர பூஜ்யத்தை அடையவும், நாம் உள்ளூர் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியை விரிவுபடுத்துவதிலும் காலநிலையைக் கருத்தில் கொண்டு முடிவுகள் மேற்கொள்வதை ஊக்குவிப்பதிலும் கவனம் குவிக்க வேண்டும். நாம் குறைந்த கார்பனைக் கொண்ட மாகாண ஆற்றல் கொள்கைகளைப் பரிந்துரைக்கவும் வேண்டும்.

நமது ஆற்றல் தொடர்பான பசுமை இல்ல வாயு உமிழ்வுகளைக் குறைக்க நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாவன:



**நடவடிக்கை:** புதுப்பிக்கத்தக்க இயற்கை வாயுவைக் கழிவிலிருந்து தயாரித்தல்.

**நடவடிக்கை:** கூரைக்கு மேலான மற்றும் தரையில் பொருத்திய சூரிய ஒளிப் பலகைகளை நிறுவுவதை அதிகரித்தல்.

**நடவடிக்கை:** குறைந்த கார்பன் கொண்ட ஆற்றல் தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதில் மாவட்ட ஆற்றல் அமைப்பு உரிமையாளர்களுக்கும் உருவாக்குநர்களுக்கும் ஆதரவளித்தல்.

**நடவடிக்கை:** ஆற்றலைச் சேமித்துவைத்தலில் முதலீட்டை விரைவுபடுத்துதல்.

**நடவடிக்கை:** உள்ளூர்த் தீர்வுகளுக்கு வழிசெய்வதற்கு, குறைந்த கார்பன் கொண்ட மற்றும் தாக்குப்பிடிக்கும் ஆற்றல் கொள்கைகளை உறுதிப்படுத்த அரசின் பிற மட்டங்களுடன் பணிபுரிதல்.



## போக்குவரத்து

போக்குவரத்து வழிமுறைகள் உள்ளூர் பசுமை இல்ல வாயு உமிழ்வுகளில் 36 சதவீதத்திற்குக் காரணமானவை; புதைபடிவ எரிபொருட்களை நமது கார்கள், லாரிகள், கப்பல்கள், ரயில்கள் மற்றும் விமானங்களில் பயன்படுத்துவது பசுமை இல்ல வாயுக்களை உருவாக்குகிறது. போக்குவரத்து உமிழ்வுகளில் 73 சதவீதம் சொந்த வாகனங்களிலிருந்து வருகின்றன.

நமது 2030 குறைப்பு இலக்குகளை எட்டவும் 2050 அல்லது அதற்கு முன்னதாக நிகர பூஜ்யத்தை அடையவும், நாம் முனைப்பான போக்குவரத்து மற்றும் பொதுப் போக்குவரத்துப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் அதே சமயத்தில் மின் வாகனங்களை விரைவாக உள்வாங்க வழிவகுப்பதில் கவனம் குவிக்க வேண்டும்.

நமது போக்குவரத்து பசுமை இல்ல வாயு உமிழ்வுகளைக் குறைக்க நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாவன:

**நடவடிக்கை:** ஊக்கச் சலுகைகளின் மூலம் மின் வாகனங்களின் பயன்பாட்டை அதிகரித்தல்.

**நடவடிக்கை:** பொது வெளிகளிலும் தனியார் சொத்துக்களிலும் மின் வாகன மின்னேற்றத்தை அதிகரித்தல்.

**நடவடிக்கை:** குறைந்த உமிழ்வுகளைக் கொண்ட சுமை, சரக்குகளை நகர்த்துவதற்கான கடைசி மைல் வரையிலான டெலிவரி வியூகங்கள் ஆகியவற்றின் பயன்பாட்டையும் அவற்றுக்கான ஆதரவையும் விரிவுபடுத்துதல்.

**நடவடிக்கை:** மிதிவண்டி மற்றும் பாதசாரி உள்கட்டமைப்பு மற்றும் முன்னுரிமை மண்டலங்களை விரிவுபடுத்துதல்.

**நடவடிக்கை:** பொதுப் போக்குவரத்தை விரிவுபடுத்தி பேருந்து விரைவுப் போக்குவரத்தின் நடைமுறைப்படுத்துதலை விரைவாக்குதல்.

**நடவடிக்கை:** TTC வாகன வரிசையைத் தொடர்ந்து மின்மயமாக்குதல்.





## நிலைபெறு நுகர்வும் கழிவும்

கழிவு, உள்ளூர் பசுமை இல்ல வாயு உமிழ்வுகளில் 9 சதவீதமாகும். கழிவிலிருந்து வரும் பெரும்பாலான பசுமை இல்ல வாயு உமிழ்வுகள் நிலநிரப்பிடங்களிலிருந்து வருகின்றன; அதில் ஒரு சிறு பகுதி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிகழ்முறைகளிலிருந்து வருகின்றன.

நமது 2030 குறைப்பு இலக்குகளை எட்டவும் 2050-க்குள் அல்லது அதற்கு முன்னதாக நிகர பூஜ்யத்தை அடையவும், நாம் கழிவுகளற்ற, சுழற்சிப் பொருளாதாரத்தை நோக்கி முன்னேறுவதில் கவனம் குவிக்க வேண்டும். ஒரு சுழற்சிப் பொருளாதாரம் ஒரு வளத்தை எடுத்துக்கொள்ளுதல், ஒரு தயாரிப்பை உருவாக்குதல், பின்பு அத்தயாரிப்பைத் தூக்கி எறிதல் என்பவற்றோடு நின்றுவிடாமல் தயாரிப்பு ஆயுள், புதுப்பிக்கத்தக்க தன்மை, மறுபயன், பழுதுநீக்கம் ஆகியவற்றில் கவனம் குவிக்கும்.

நமது கழிவு பசுமை இல்ல வாயு உமிழ்வுகளைக் குறைக்க நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாவன:



**நடவடிக்கை:** நகரம் தழுவிய, நுகர்வு அடிப்படையிலான உமிழ்வுகள் இருப்புக்கணக்கு ஒன்றை எடுத்து, ஒரு குறைப்பு இலக்கை அமைத்தல்.

**நடவடிக்கை:** நகரம் தழுவிய பொருள் நுகர்வைக் குறைத்து சுழற்சித்தன்மையை (அதாவது, திறம்பட மறுபயன் செய்தல், வளங்களை மீட்டல்) அதிகரித்தல்.

**நடவடிக்கை:** உணவு மற்றும் இயற்கைக் கழிவில் கவனம் குவித்து, நகரம் தழுவிய கழிவுக் குறைப்பு மற்றும் மடைமாற்றல் குறித்த சென்றடைவு மற்றும் ஈடுபாட்டைத் தொடர்தல்.

## பசுமைவெளி

நிகர பூஜ்யத்தை எட்டுவதற்கு, வளிமண்டலத்திலிருந்து கார்பனை அகற்றுவதற்கான வாய்ப்புகளைப் பரிசீலிக்கவும் வேண்டும். மரங்கள், பூங்காக்கள், கணவாய்கள் ஆகியவை உட்படப் பசுமைவெளிகள்



இயற்கை வழியில் கார்பனை அகற்றி ஒரு வாழத்தக்க, ஆரோக்கியமான நகரத்தை அளிக்கின்றன.

நமது 2030 குறைப்பு இலக்குகளை எட்டவும் 2050-க்குள் அல்லது அதற்கு முன்னதாக நிகர பூஜ்யத்தை அடையவும், நாம் பின்வரும் இயற்கை அடிப்படையிலான தீர்வுகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும்:

**நடவடிக்கை:** மரங்களின் கவிகைப் பரப்பு, பல்லுயிர்வாழ்வு ஆகியவற்றை அதிகரித்துப் பசுமைவெளிகளை மேம்படுத்துதல்.

**நடவடிக்கை:** மரங்களின் கவிகைப் பரப்பு எங்கு தேவைப்படுகிறதோ அங்கு அதிகரித்து, நகர்ப்புறக் காட்டின் நியாயமான பகிர்ந்தளிப்பை அடைதல்.



## முடிவெடுத்தல் மற்றும் நியாயமான ஈடுபாடு

நிகர பூஜ்யத்தை எட்டுவதற்குத் தகவல் அறிந்து முடிவெடுப்பதும் சமூகம் தழுவிய ஈடுபாடும் தேவை. மிகப்பெரிய பசுமை இல்ல வாயு உமிழ்வு ஆதாரங்களைக் குறிவைத்தல், நமது நகரத்தில் உள்ள பசுமைவெளிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்குக் கூடுதலாக, நாம் காலநிலையைக் கருத்தில் கொண்ட முடிவுகளை மேற்கொள்ளுதல், நமது உள்ளூர் சமூகத்துடன் – பூர்வகுடிச் சமூகங்கள், ஒப்புரவு நாடும் குழுக்கள், இளைஞர்கள் ஆகியோருடன் உட்பட – இணைந்து செயல்படுதல் ஆகியவற்றில் கவனம் குவிக்க வேண்டும்.

நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் பின்வருவனவும் அடங்கும்:

**நடவடிக்கை:** நகராட்சி முடிவெடுப்பு நிகழ்முறையில் காலநிலை குறித்த பரிசீலனைகளைச் சேர்ப்பதற்கு எல்லா புத்தம்புதிய நகர இயக்குத் திட்டங்கள் மற்றும் முதன்மைச் செயல்திட்டங்களுக்காகக் கூட்டாண்மை நிறுவனங்கள் அனைத்தும் ஒரு காலநிலை ஆடியைக் கைக்கொள்ளுதல்.

**நடவடிக்கை:** உள்ளூர் காலநிலை நடவடிக்கையை வழிநடத்தி நடைமுறைப்படுத்த ஒப்புரவு நாடும் குழுக்களைச் சென்றடைவதில் கவனம் குவித்தல்.





**நடவடிக்கை:** அறிவைப் பகிரப் பூர்வகுடிச் சமூகங்களுடன் இணைந்து பணிபுரிதல்.

**நடவடிக்கை:** இளைஞர் ஈடுபாடு மற்றும் தலைமையில் கவனம் குவித்தல்.

**நடவடிக்கை:** ஒரு காலநிலை ஆலோசனைக் குழுவை நிறுவுதல்.

## நாம் நிகர பூஜ்யத்தை எட்ட உதவுங்கள்!

நாம் நமது 2030 இலக்குகளை அடைவதை உறுதிப்படுத்த எந்தக் காலநிலை நடவடிக்கைககளைக் குறுகியகால அளவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று முன்னுரிமைப்படுத்த எங்களுக்கு உங்கள் உதவி தேவை. நமது பசுமை இல்ல வாயு உமிழ்வுகளைத் திறம்படக் குறைத்து நிகர பூஜ்யத்தை அடைவது என்றால் யாரையும் விலக்காமல் இருத்தல்—எனவே, எந்தக் காலநிலை நடவடிக்கைகளை முதலில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நீங்கள் சிந்திக்கும்போது, நாம் ஒன்றாக நிகர பூஜ்யத்திற்கான பாதையில் பயணம் செய்கையில் இந்த நடவடிக்கைகள் உங்கள் சமூகத்தில் எப்படித் தோற்றமளிக்கக்கூடும் என்பது குறித்தும் சிறிது சிந்தித்துப்பாருங்கள்.

TransformTO.ca-இல் கருத்தாய்வை நிறைவு செய்யுங்கள் அல்லது கலந்துரையாடல் வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள கேள்விகளையும் பொருட்களையும் பயன்படுத்தி உங்கள் சொந்தக் காலநிலை உரையாடலுக்கு இடச்சேவை அளியுங்கள்.



# முன்மொழியப்படும் ட்ரான்ஸ்ஃபார்ம்TO நிகர பூஜ்ய வியூக நடவடிக்கைகள் - விவரச்சுருக்கம்

## கட்டிடங்கள்

- புதிய நிலைகளுக்கான டொரன்டோ பசுமைத் தரநிலை (Toronto Green Standard) வளங்குன்றா வடிவமைப்புத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதைத் தொடர்தல், தனியார் கட்டிடங்கள் 2030-க்குள் அல்லது அதற்கு முன்னதாக நிகர பூஜ்யத்திற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று விதித்தல்.
- நகரத்திற்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு நிகர பூஜ்ய உமிழ்வுகள் இருக்க வேண்டும் என விதித்தல்.
- புதிய கட்டுமானத்திற்குக் குறைந்த கார்பனைக் கொண்ட பொருட்களைப் பயன்படுத்தக் கட்டிட உரிமையாளர்களுக்கு ஆதரவளித்தல்.
- வீடுகள் மற்றும் கட்டிடங்களிலிருந்து வரும் பசுமை இல்ல வாயு உமிழ்வுகள் குறித்துத் தெரிவிக்கவும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் தேவைப்பாடுகளை அமைத்தல்.
- செயல்திறன், சௌகரியம், புதைபடிவ எரிபொருள் மூலமான வெப்பமூட்டும் முறையிலிருந்து மாறுதல் ஆகியவற்றை மேம்படுத்தி, வீட்டு மற்றும் கட்டிட உரிமையாளர்களுக்குக் கட்டுபடியாக்கும் இற்றைப்பொருத்தங்களைச் செய்யத் தொடக்க நடவடிக்கைக்கு ஆதரவளித்தல்.
- முன்பே உள்ள கட்டிடங்களுக்குப் பூஜ்ய உமிழ்வு இற்றைப்பொருத்தங்களை அதிகரிப்பதற்காக விரைவான சந்தை உருமாற்றத்திற்கு வழிசெய்ய, கட்டிடத் துறையில் வேலைகளை உருவாக்குவதற்கு ஆதரவளித்தல், தொழில்துறைத் திறனை வளர்த்தல்.

## ஆற்றல்

- புதுப்பிக்கத்தக்க இயற்கை வாயுவைக் கழிவிலிருந்து தயாரித்தல்.
- கூரைக்கு மேலான மற்றும் தரையில் பொருத்திய சூரிய ஒளிப் பலகைகளை நிறுவுவதை அதிகரித்தல்.
- குறைந்த கார்பன் கொண்ட ஆற்றல் தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதில் மாவட்ட ஆற்றல் அமைப்பு உரிமையாளர்களுக்கும் உருவாக்குநர்களுக்கும் ஆதரவளித்தல்.
- ஆற்றலைச் சேமித்துவைத்தலில் முதலீட்டை விரைவுபடுத்துதல்.
- உள்ளூர்த் தீர்வுகளுக்கு வழிசெய்வதற்கு, குறைந்த கார்பன் கொண்ட மற்றும் தாக்குப்பிடிக்கும் ஆற்றல் கொள்கைகளை உறுதிப்படுத்த அரசின் பிற மட்டங்களுடன் பணிபுரிதல்.

## போக்குவரத்து

- ஊக்கச் சலுகைகளின் மூலம் மின் வாகனங்களின் பயன்பாட்டை அதிகரித்தல்.



- பொது வெளிகளிலும் தனியார் சொத்துக்களிலும் மின் வாகன மின்னேற்றத்தை அதிகரித்தல்.
- குறைந்த உமிழ்வுகளைக் கொண்ட சுமை, சரக்குகளை நகர்த்துவதற்கான கடைசி மைல் வரையிலான டெலிவரி வியூகங்கள் ஆகியவற்றின் பயன்பாட்டையும் அவற்றுக்கான ஆதரவையும் விரிவுபடுத்துதல்.
- மிதிவண்டி மற்றும் பாதசாரி உள்கட்டமைப்பு மற்றும் முன்னுரிமை மண்டலங்களை விரிவுபடுத்துதல்.
- பொதுப் போக்குவரத்தை விரிவுபடுத்தி பேருந்து விரைவுப் போக்குவரத்தின் நடைமுறைப்படுத்துதலை விரைவாக்குதல்.
- TTC வாகன வரிசையைத் தொடர்ந்து மின்மயமாக்குதல்.

## நிலைபெறு நுகர்வும் கழிவும்

- நகரம் தழுவிய, நுகர்வு அடிப்படையிலான உமிழ்வுகள் இருப்புக்கணக்கு ஒன்றை எடுத்து, ஒரு குறைப்பு இலக்கை அமைத்தல்.
- நகரம் தழுவிய பொருள் நுகர்வைக் குறைத்து சுழற்சித்தன்மையை (அதாவது, திறம்பட மறுபயன் செய்தல், வளங்களை மீட்டல்) அதிகரித்தல்.
- உணவு மற்றும் இயற்கைக் கழிவில் கவனம் குவித்து, நகரம் தழுவிய கழிவுக் குறைப்பு மற்றும் மடைமாற்றல் குறித்த சென்றடைவு மற்றும் ஈடுபாட்டைத் தொடர்தல்.

## பசுமைவெளி

- மரங்களின் கவிகைப் பரப்பு, பல்லுயிர்வாழ்வு ஆகியவற்றை அதிகரித்துப் பசுமைவெளிகளை மேம்படுத்துதல்.
- மரங்களின் கவிகைப் பரப்பு எங்கு தேவைப்படுகிறதோ அங்கு அதிகரித்து, நகர்ப்புறக் காட்டின் நியாயமான பகிர்ந்தளிப்பை அடைதல்.

## முடிவெடுத்தல் மற்றும் நியாயமான ஈடுபாடு

- நகராட்சி முடிவெடுப்பு நிகழ்முறையில் காலநிலை குறித்த பரிசீலனைகளைச் சேர்ப்பதற்கு எல்லா புத்தம்புதிய நகர இயக்குத் திட்டங்கள் மற்றும் முதன்மைச் செயல்திட்டங்களுக்காகக் கூட்டாண்மை நிறுவனங்கள் அனைத்தும் ஒரு காலநிலை ஆடியைக் கைக்கொள்ளுதல்.
- உள்ளூர் காலநிலை நடவடிக்கையை வழிநடத்தி நடைமுறைப்படுத்த ஒப்புரவு நாடும் குழுக்களைச் சென்றடைவதில் கவனம் குவித்தல்.
- அறிவைப் பகிரப் பூர்வகுடிச் சமூகங்களுடன் இணைந்து பணிபுரிதல்.
- இளைஞர் ஈடுபாடு மற்றும் தலைமையில் கவனம் குவித்தல்.
- ஒரு காலநிலை ஆலோசனைக் குழுவை நிறுவுதல்.



## கலைச்சொற்கள் மற்றும் வரையறைகள்

**காலநிலை ஆலோசனைக் குழு** – ட்ரான்ஸ்ஃபார்ம்TO வியூகம் குறித்து அறிவுரை அளித்து நகரத்தின் நடவடிக்கைகள் நியாயமாகவும் நகர வாசிகளின் முன்னுரிமைகளையும் அக்கறைகளையும் பிரதிபலிப்பவையாகவும் இருப்பதை உறுதிப்படுத்தப் பல வகையான பின்னணிகளைக் கொண்ட தனிநபர்கள் இந்தக் குழுவில் அடங்குவார்கள்.

**காலநிலை ஆடி** – ஒரு 'காலநிலை ஆடி', காலநிலைத் தாக்கங்கள் குறித்த பரிசீலனைகளை நிதி சார்ந்த முடிவுகள் உட்பட எல்லா பெரிய டொரன்டோ நகர முடிவுகளிலும் சேர்க்கும். இது நகர முதலீடுகள், கொள்கைகள், திட்டங்கள் ஆகியவை நமது காலநிலை மாற்ற இலக்குகளை ஆதரிப்பதை உறுதிப்படுத்த உதவும்.

**நுகர்வு அடிப்படையிலான உமிழ்வுகளின் விவரப்பட்டியல்** – வேறொரு இடத்தில் தயாரிக்கப்பட்டு, அனுப்பப்பட்டு, பின்பு டொரன்டோ வாசிகளால் பயன்படுத்தப்பட்டு அப்புறப்படுத்தப்படும் சரக்குகள் மற்றும் சேவைகளின் நுகர்விலிருந்து வரும் பசுமை இல்ல வாயு உமிழ்வுகளை நகரம் ஆய்வுசெய்து அவற்றுக்கு ஒரு வரம்பை அமைக்கும்.

**மாவட்ட ஆற்றல்** – குறைந்த கார்பனைக் கொண்ட ஒரு மாவட்ட ஆற்றல் அமைப்பானது உமிழ்வுகளைக் குறைக்கவும் செயல்திறனை அதிகரிக்கவும் ஒரு பகுதியில் உள்ள பல கட்டிடங்களுக்கு வெப்பமூட்டுவதற்கு வெப்ப மீட்பு, புவிப் பரிமாற்றம், சூரிய ஒளி வெப்பம் போன்ற புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் ஆற்றலைப் பயன்படுத்துகிறது.

**ஆற்றலைச் சேமித்துவைத்தல்** – புதுப்பிக்கத்தக்க ஆற்றலைச் சேமித்துவைத்து அதைத் தேவைப்படும்போது பயன்படுத்தும் திறனை அளிக்கிறது.

**குறைந்த கார்பனைக் கொண்ட பொருட்கள்** – கட்டுமானப் பொருட்களில் வெளியாகும் உமிழ்வுகள், பிரித்தெடுத்தல் முதல் இயக்கத்திலிருந்து அகற்றுதல் வரை பெரிய கட்டிடங்களின் மொத்த உமிழ்வுகளில் 80 சதவீதம் வரை இருக்கக்கூடும் என்று ஆய்வுகள் காட்டுகின்றன. குறைந்த கார்பனைக் கொண்ட பொருட்களைப் பயன்படுத்துவதும் கட்டுமான நடைமுறைகளும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.



**டொரன்டோ பசுமைத் தரநிலை (Toronto Green Standard, TGS)** – புதிய தனியார் மற்றும் நகரத்திற்குச் சொந்தமான உருவாக்கங்களுக்கான டொரன்டோவின் வளங்குன்றா வடிவமைப்புத் தேவைப்பாடுகள்.

**பூஜ்ய உமிழ்வு இற்றைப்பொருத்தங்கள்** – பசுமை இல்ல வாயு உமிழ்வுகளைக் குறைக்க முன்பே உள்ள கட்டிடங்களில் மாற்றங்கள் செய்தல். ஆழ்ந்த உமிழ்வு இற்றைப்பொருத்தங்களுக்கான புதிய தேவையை நிறைவேற்ற, ஒரு வலுவான, போதுமான எண்ணிக்கையிலுள்ள பணியாளர் குழு ஒன்று தயாராக இருப்பதை உறுதிப்படுத்த நாம் பணியாளர் உருவாக்கத்திற்கும் பயிற்சிக்கும் ஆதரவளிப்போம். முன்பே உள்ள பயிற்சிகளை மேம்படுத்தவும் புதிய பயிற்சிகளின் உருவாக்கத்திற்கு ஆதரவளிக்கவும் தொழிற்சங்கங்கள், பயிற்சி அமைப்புகள், தொழிற்துறைச் சங்கங்கள் ஆகியவற்றுடன் கூட்டு ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.



# கலந்துரையாடல் வழிகாட்டி



# கலந்துரையாடல் வழிகாட்டி

இப்போது உங்களுக்கு ட்ரான்ஸ்ஃபார்ம்TO: நிகர பூஜ்யக் காலநிலை நடவடிக்கைகள் குறித்த பின்னணித் தகவல்களை மீள்பார்வையிட வாய்ப்பு கிடைத்திருப்பதால், தயவுசெய்து பின்வரும் கேள்விகளைப் பரிசீலித்து இவை குறித்துக் கலந்துரையாடுங்கள்.

1. குறுகியகால அளவில் நடைமுறைப்படுத்த வேண்டிய மிக முக்கியமான நிகர பூஜ்யக் காலநிலை நடவடிக்கைகள் யாவை? ஏன்?
2. எந்த நிகர பூஜ்யக் காலநிலை நடவடிக்கைகள் உங்களுக்கும் உங்கள் சமூகத்திற்கும் மிகச் சவாலாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? ஏன்?
3. இந்த நிகர பூஜ்யக் காலநிலை நடவடிக்கைகளை உங்கள் சமூகத்தினர் ஏற்பதை ஆதரிக்கவும் ஊக்குவிக்கவும் என்ன தேவைப்படுகிறது?

மேலதிகத் தகவல்களுக்கு தயவுசெய்து பக்கம் 33-இல் உள்ள கலைச்சொற்கள் மற்றும் வரையறைகள் பிரிவைப் பாருங்கள்.

